//தனிகவனம்// //மிக மிக அவசரம்//

**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண்.3826/இ3/2018, நாள். .10.2019**

---

பொருள் : பள்ளிக்கல்வி – கல்வி தகவல் மேலாண்மை முறைமை இணையதளத்தில் (EMIS Website) அரசு / அரசு உதவிபெறும் தொடக்க / நடுநிலை / உயர் / மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை – சார்பு.

பார்வை : சென்னை, தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகள். ந.க.எண்.149/வி2/இ2/2019 நாள். .10.2019

---

1. அனைத்து அரசு மற்றும் அரசு உதவிபெறும் மேல்நிலைப்பள்ளிகளில் கல்வி தகவல் மேலாண்மை முறைமை இணையதளத்தின் முகப்பு பக்கத்தில் மாணவர்(Student) தலைப்பின் கீழ் கடைசியாக இடம் பெற்றுள்ள "2017–18 மற்றும் 2018–19 12$^{th}$ Std. Student Details" என்ற இணைய பக்கத்தில் 2017–18 மற்றும் 2018–19 ஆகிய கல்வியாண்டுகள் பனிரெண்டாம் வகுப்பு பயின்று பள்ளியை விட்டுச் சென்ற மாணவர்களின் பெயர் பட்டியல் இடம் பெற்றுள்ளது, இரண்டு பட்டியல்களில் இடம் பெற்றுள்ள ஒவ்வொரு மாணவர்களுக்கும், அவர்களின் பெயருக்கெதிரே அவர்களின் தேர்ச்சி விவரம் (+2) மற்றும் அவர்கள் தற்போது பயின்று வரும் உயர்கல்வி குறித்த விவரம் அல்லது உயர்கல்வி பயிலாமல் பணி செய்கிறார்கள் எனில் அதன் விவரத்தினை உடனடியாக உள்ளீடு செய்தல் வேண்டும்.

2. அனைத்துவகை பள்ளிகளிலும் மாணவர்கள் இடை வகுப்பிலோ அல்லது இறுதி வகுப்பில் தேர்ச்சி பெற்றதன் காரணத்தாலோ மாணவர்களின் விவரம் பொது தொகுப்பிற்கு (Common Pool) அனுப்பப்படுகிறது. அவ்வாறு அனுப்பப்பட்ட மாணவர்கள் எப்பள்ளியிலும் இணைக்கப்படாமல் தொடர்ந்து பொது தொகுப்பிலேயே (Common Pool) நிலுவையில் உள்ள மாணவர்களின் விவரங்கள் கல்வி தகவல் மேலாண்மை இணைய பக்கத்தில் (Students -> students in common pool) மாணக்கரின் விவரங்கள், பெற்றோரின் கைப்பேசி எண்ணுடன் அளிக்கப்பட்டுள்ளது. அம்மாணவர்கள் வேறு பள்ளியில் சேர்க்கப்பட்டிருப்பின் அதன் விவரத்தினையோ அல்லது இடைநின்ற மாணவர் எனில் அதன் விவரத்தினையோ common pool remark இல் உள்ளீடு செய்தல் வேண்டும்.

3. EMIS இணையதளத்தின் முகப்பு பக்கத்தில் பணியாளர் விவரம் (Staff Detail) என்ற தலைப்பின் கீழ் இடம் பெற்றுள்ள Teachers children details என்ற இணைய பக்கத்தில் ஆசிரியர்களின் குழந்தைகள் சார்பான விவரங்களை உள்ளீடு செய்தல் வேண்டும்.

4. EMIS இணையதளத்தின் முகப்பு பக்கத்தில் பள்ளி(School) என்ற தலைப்பின் கீழ் இடம் பெற்றுள்ள School Needs CSR என்ற இணைய பக்கத்தில் பள்ளியின் அடிப்படை தேவைகள் குறித்த விவரங்களை உள்ளீடு செய்தல் வேண்டும்.

5. EMIS இணையதளத்தின் முகப்பு பக்கத்தில் பள்ளி(School) என்ற தலைப்பின் கீழ் கடைசியாக இடம் பெற்றுள்ள Scale Register என்ற இணைய பக்கத்தில் பள்ளியின் அளவுகோல் பதிவேட்டின் விவரங்களை உள்ளீடு செய்தல் வேண்டும்.

தொடக்க மற்றும் நடுநிலைப்பள்ளிகளை பொறுத்தவரை அளவுகோல் பதிவேட்டின் விவரங்களை வட்டாரக் கல்வி அலுவலர்கள் மேற்கொள்ளுதல் வேண்டும்.

மேற்காண் பணியினை **04.10.2019**க்குள் உள்ளீடு செய்து முடித்திட அனைத்து அரசு / அரசு உதவிபெறும் தொடக்க / நடுநிலை / உயர் / மேல்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேற்காண் பணிகள் பள்ளிகளில் மேற்கொள்ளப்பட்டு வருகிறதா என தொடக்க / நடுநிலை பள்ளிகளுக்கு வட்டாரக் கல்வி அலுவலர்களும், உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு மாவட்டக் கல்வி அலுவலர்களும் நேரடி ஆய்வு செய்தல் வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.

குறுவள மைய பள்ளித் தலைமை ஆசிரியர்கள் தங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பள்ளிகளில் மேற்காண் பணியினை உடனடியாக உள்ளீடு செய்து முடிக்க துரித நடவடிக்கை எடுக்குமாறும், **04.10.2019**க்குள் உள்ளீடு செய்து முடிக்கப்பட்டதை உறுதி செய்யுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**முதன்மைக் கல்வி அலுவலர்**
**வேலூர்**

**பெறுநர்**
அனைத்து அரசு /அரசு உதவிபெறும் தொடக்க / நடுநிலை /
உயர் /மேல்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர்கள்
அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள், வேலூர் மாவட்டம்.
சமக்கரசிக்ஷா உதவி திட்ட அலுவலர், வேலூர் மாவட்டம்.
அனைத்து குறுவளமைய பள்ளித் தலைமை ஆசிரியர்கள், வேலூர் மாவட்டம்.
வட்டாரக் கல்வி அலுவலர், வேலூர் மாவட்டம்.
வட்டார வள மைய மேற்பார்வையாளர்கள் (பொ), வேலூர் மாவட்டம்.

**நகல்**
சென்னை – **6**, பள்ளிக்கல்வி இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக
பணிந்தனுப்பப்படுகிறது.